# 7B செயல்முறைப் பகுதி

## 1. ட்ராகனா டிமிற்றியேவிச்: அடிப்படை மற்றும் வெளிப்படை மதிப்பீட்டுத் தாள்கள்: ஓர் எடுத்துக்காட்டு

ட்ராகனா டிமிற்றியேவிச் பெல்கிறேட் / சேர்பியாவைச் சேர்ந்தவர். 1999 தொடக்கம் சூரிச் மாநிலத்தில் சேர்பியன் பா.மொ.க ஆசிரியராகப் பணிசெய்கிறார்.

என்னுடைய மாணவர்களுடன் சேர்ந்து, வெவ்வேறு பணிப் பரப்புகளுக்கான கணிப்பீட்டுத் தாள்களை உருவாக்கியுள்ளேன் (ஓர் எடுத்துரைப்புச் செய்க, வகுப்புக்கு ஏதாவது ஒன்றைப் படிக்கவும், ஒரு வீரதீர எழுத்துருவினை எழுதுக, முதலியன). பெரும்பாலான சுவிஸ் மாநிலங்களில் 4-6ம் வகுப்புகளில் பயன்படுத்தப்படும் "மொழி நிலம்" கற்பித்தற் கருவிகளிலிருந்து பெற்ற கண்காணிப்புத் தாள்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டுத் தாள்களை அடிப்படையாகக் கொண்டு இந்த அகத்தூண்டுதல் எனக்கு ஏற்பட்டது. எனக்கு, மாணவர்களுடன் சேர்ந்து இத்தாள்களை உருவாக்குவது இன்றியமையாததாக இருந்தது. இதனால் அவர்கள் கூட்டாக விளங்கிக்கொண்டு கணிப்பீட்டு அடிப்படைக்குப் பக்கத்துணை செய்வர்.

மாணவர்களுடைய கண்காணிப்பு மற்றும் விமர்சன இயலுமைகளை மேம்படுத்த இத் தாள்களை நான் நடைமுறைப்படுத்தினேன். ஆனால் என்னுடைய கணிப்பீட்டுக்கு நானும் அவற்றைப் பயன்படுத்துகிறேன்.

திறமை நிலைக்கேற்றபடி கணிப்பீடுகள் எளிதாக வேறுபடுத்தப்படலாம், இங்கு, "I" கீழ்ப்பிரிவு மாணவர்களும் நிறைவுசெய்யக்கூடிய எளிமையான அடிப்படையைக் குறிக்கும். இடைநிலை மற்றும் மேல்நிலை தகைமைக்கான புள்ளிகள் முறையே "II" மற்றும் "III" இனால் குறிக்கப்படுகின்றன.

எடுத்துரைப்புகளுக்கான எடுத்துக்காட்டுக் மதிப்பீட்டுத் தாள் (விரிவாக்க முடியும் மற்றும் விரிவாக்க வேண்டும்!)

| மாணவர்களின் பெயர் மற்றும் வகுப்பு நாள்: | | | | | |
|---|---|---|---|---|---|
| எடுத்துரைப்பின் கருப்பொருள்: | | | | | |
| அடிப்படைகள் | போதாது | ஓரளவு போதாது | நன்று | மிகநன்று | கருத்துகள் |
| தெளிவான அறிவிப்பு, கேட்பவர்கள் எடுத்துரைப்பு எதனைப் பற்றியது என்பதை அறிவர் (I–III) | | | | | |
| கவர்ச்சியான அறிமுகம், அடுத்து வரப்போவது பற்றிய ஆர்வத்தைத் தூண்டுதல (II–III) | | | | | |
| உள்ளடக்கம் விளங்கக்கூடியது (I–III) | | | | | |
| தெளிவானது, வெளிப்படைக் கட்டமைப்பு (III) | | | | | |
| விளக்க தேவைகளுக்காக படங்கள், இசை, பொருட்கள் முதலியனவற்றைப் பயன்படுத்தல் (II–III) | | | | | |
| மிக இன்றியமையாத குறிப்புகளின் சுருக்கத்துடன் முடிவுரை (III) | | | | | |
| ஒரு பணித்தாள், ஒரு வினா-விடை, அல்லது எடுத்துரைப்புப் பற்றிய கலந்துரையாடல் (II, III) | | | | | |
| எடுத்துரைப்பு வழங்கல் தெளிவாகவும் விளங்குதற்கு ஏற்ற ஒலியும் (I–III) | | | | | |
| எடுத்துரைப்பு பல்திறப்பட்டதாகவும் சலிப்பில்லாமலும் அமைந்தன (II, III) | | | | | |
| கேட்பவர்களுடன் நல்ல கண் தொடர்பு (II, III) | | | | | |

ஒரு நல்ல, நான்கு தலைப்புகளுக்கான ("போதாது" தொடக்கம் "நன்று" வரையும்) மிக வலுவான உருவாக்க மாற்று இரண்டு தலைப்புகளாக அமையும், அவை: "குறிப்பாக உங்கள் எடுத்துரைப்பில் பினவருவனவற்றை நான் விரும்பினேன்" (கூடியது நான்கு அடிப்படைகளைச் சார்பார்க்கவும்) மற்றும் "அடுத்த முறை இக்குறிப்புக்குக் கூடிய கண்காணிப்புச் செலுத்தவும்" (கூடியது இரண்டு அடிப்படைகளைச் சார்பார்க்கவும்).

II

## 2. ஐடா ஹசிரி:
## வேண்டுமென்றே தொடரும் பணிக்கு அடிப்படையாகப் பல்வேறுபட்ட உரைகள்

ஐடா ஹசிரி அல்பானியாவின் எல்பசன் நகரைச் சேர்ந்தவர். அவர் இலண்டனில் 16 ஆண்டுகளாக வாழ்ந்துவருகிறார். அவர் 2004 இலிலிருந்து அல்பானியன் பா.மொ.க வில் ஆசிரியராகப் பணியாற்றியவர். மாணவர் பி. அமந்தா அல்பானியன் பா.மொ.க வில் 4ஆம் வகுப்பில் கற்கிறார்.

**கீழே காட்சிப்படுத்தப்பட்டுள்ள மொழிபெயர்ப்புப் பயிற்சிக்கு உரை** (இந்தப் பயிற்சி சேர்ந்துள்ள தேர்வின் ஏனைய பகுதிகளுக்கும் இக் கருத்துரைகள் பயன்படும்):


நீங்கள் நல்ல வேலை செய்துள்ளீர்கள். எதிர்காலத்தில், பின்வரும் குறிப்புகளுக்கு கண்காணிப்புச்செய்க:

- மேற்கோள் குறியீடுகளைப் பயன்படுத்துக (" ").
- முதல்நிலையில் பெரிய எழுத்துகளைப் பயன்படுத்துதல் (நாட்டின் பெயர்கள், முதலியன).
- ஒரு வாக்கியத்தின் முதல்நிலை எப்பொழுதும் பெரிய எழுத்தே!
- முக்காற் புள்ளிப் பயன்பாடு: முதன்மையாக ஒரு பட்டியலை அல்லது ஒரு கணக்கெடுப்பைச் செய்யும்போது.
- ë யிலுள்ள குற்றுகளை மறக்கவேண்டாம் இல்லாவிட்டால் இது e எனப் படிக்கப்படும்!
- உங்கள் மொழிபெயர்ப்புத் தொடர்பாக நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் தயவாக ஓர் ஒத்திசைவான வாக்கியத்தை உருவாக்க சரியான சொல்லொழுங்கினைக் கண்காணிக்குக. (அல்பானியனிலும் கூட)

**அவளுடைய கூடுதலான வேலைக்கான பின்வரும் படிமுறைகள் தொடர்பாக மாணவியுடன் வாய்மொழிக் கலந்துரையாடல்:**

- மேற்காணும் என் கருத்துரையில் எந்த மூன்று குறிப்புகளை நீங்கள் ஆய்வுசெய்ய விரும்புகிறீர்கள்?
- நான் பின்வரும் பயிற்சிகளை முன்மொழிகிறேன்: … (எ.டு. நீங்களாக ஒரு சிறிய எழுத்துருவினை எழுதுக)

திருத்திய மொழிபெயர்ப்புப் பயிற்சி:


**10.Përktheni teksin e mëposhtem**

More than 11,000 people were evacuated from their homes in Albania due to floods that have hit the country in the past week. Main entrances into the northern town of Shkodra were still blocked on Sunday while several parts of the town where the water level is higher than two meters (3.2 feet) have no electricity. At least 1,400 police and soldiers have been deployed in the northern region to help with the evacuation of residents and to secure food for them. Albanian authorities on Saturday called for NATO'S help to be able to cope with the situation. Turkey already sent overnight to Albania three helicopters with a medical team and humanitarian aid while two other helicopters have arrived on Sunday from Greece. Foreign Minister Edmond Haxhinasto on Sunday called a meeting with EU and NATO ambassadors to Albania to ask for their countries' help.

Fund.

## 3. பெர்ஸன் யில்மஸ் செங்குல்: நிகழ்காலவினை அமைப்புக்கான இலக்கணப் பயிற்சிக்கான கற்றல் சார்ந்த மதிப்பீடு

பெர்ஸன் யில்மஸ் செங்குல் துருக்கியைச் சேர்ந்தவர். அவர் மூன்று ஆண்டுகளாக நூர்ன்பேர்க்கில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அங்கு பா.மொ.க துருக்கிஷ் ஆசிரியராக பணியாற்றுகிறார். மாணவி அசெல்யா கே. ஜெர்மனியில் பிறந்தவர் உயர் பள்ளியில் 5ஆம் வகுப்பில் படிக்கிறாள்.

கீழே காட்சிப்படுத்தப்பட்டுள்ள பணித்தாளுக்கான உரையினை மேம்படுத்தல்:


பயிற்சிக்கான கருத்துரை:

- துருக்கிஸ்சில் இரண்டு உயிர்கள் அருகருகே இடம்பெறமாட்டா (மாறாக ஜேர்மனில் இடம்பெறும்).

- "i" மற்றும் " ı" இடையேயும் "s" மற்றும் "z" இடையேயும் உள்ள வேறுபாட்டில் கண்காணிப்புச் செலுத்தவும்

அசெல்யா, நீங்கள் துருக்கிஷ் வகுப்பில் இருந்தாலும் கூட, ஜேர்மனிலேயே எண்ணுகிறீர்கள்! ஆனால் நீங்கள் ஓர் அர்ப்பணிப்புடைய மாணவி. நீங்கள் இப் பிழைகளை யெல்லாம் சிறிய முயற்சியினால் வென்றுவிடுவீர்கள்.

திருத்திய பணித்தாள்:




அடுத்த தடவை அவற்றை திருப்பிச் செய்யவேண்டாம்!

மிக இன்றியமையாத சிக்கல்களை எவ்வாறு அவள் தீர்க்கலாம் மற்றும் தீர்க்கவேண்டும் என்பதை மாணவி கற்கின்ற சிறு பக்கத்துணை செயன்முறைத்திட்டம்.

- உயிர்கள் தொடர்ந்து வருமிடத்து "ல" இல் கண்காணிப்புச் செலுத்தவும்: Gidiyorum, gidiorum அல்ல. "சிக்கல்" மூன்று தடவை இடம் பெறும் ஒரு சிறிய எழுத்துருவை எழுதுக!

- துருக்கிஷ் மொழி "i" மற்றும் "ı" ஆகிய இரண்டு எழுத்துகளையும் வேறுபடுத்துகிறது. isatanbul மற்றும் Isatanbul என்பன ஒன்றல்ல. பயிற்சி செய்வதற்காக நீங்களாகவே துருக்கிஷ் மொழியில் இச்சொற்களைப் போல் 10 கண்டுபிடிக்குக!

- முதல் வடிவ பன்மையில், ஈறு எப்போதுமே "z" , "s" அல்ல: Okuyoruz: Biz gazete okuyoruz, okuyorus அல்ல. இவ்வடிவம் இடம்பெறும் 5 சிறு வாக்கியங்கள் எழுதுக!


- கண்காணிப்புச் செலுத்துக: ஜேர்மனில் "s" சிலவேளை "z" (ஒலிப்புடையது, எடுத்துக்காட்டு "Sonne") ஆக ஒலிக்கப்படும். துருக்கிஸ்சில், இது எப்பொழுதுமே ஒலிப்பில்லாதது ("es" போல). இப்படித்தான் நீங்கள் எப்பொழுதுமே பிழை விடுகிறீர்கள்.

II

## 4. லண்டனில் ஸ்பானிஷ் பா.மொ.க ஆசிரியர்கள்: பலதரப்பட்ட எழுத்தாக்கங்களை எழுதுவதற்கான உதவி

லண்டனில் ஒக்ஸ்போர்ட் வீதியிலுள்ள புனித ஒகஸ்ரின் பள்ளியில் இந்நூலின் பதிப்பாசிரியர் பின்வரும் சுவரொட்டிகளையும் "சுவர் ஒப்பனைகளையும்" கண்டுள்ளார். பல்வேறு எழுத்துருக்களை உருவாக்குதற்கான மொழியியல் வழிமுறைகளைத் தம்முடைய மாணவர்களுக்கு வழங்குவதற்காக அங்குள்ள பா.மொ.க ஸ்பானிஷ் ஆசிரியர்கள் அவற்றை உருவாக்கினர். இத்தகைய சுவரொட்டிகளும் கற்றபித்தல் தாள்களும் எழுத்துப் பரப்பில் உள்ள கல்விசார்ந்த பணியிலும் மேலும் அடிப்படை சார்ந்த மதிப்பீடு மற்றும் கணிப்பீட்டிலும் மிகவும் பயனுள்ளனவாக இருக்கும்







(இவற்றை மீள காட்சிப்படுத்த ஒப்புதல் வழங்கிய ஸ்பானிஷ் பா.மொ.க ஆசிரியர்களுக்கு மிகுந்த நன்றிகள்)